திருவள்ளுவர் ஆண்டு 2056 30.04.2025

# உலகத்தமிழ்

இதழ் உஅக (282)

**தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்**



பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய எனத் தொடங்கும் தொல்கபிலரின்
அகநானூற்றுப் பாடல் எண் இரு நூற்(று) எண்பத்(து) இரண்டு

சிறுமலைப் பழம்போலத் தித்திக்கும் செந்தமிழ்க் கருத்துகளை எத்திக்கும்
பரப்பும் உலகத்தமிழிதழ் எண் இருநூற்(று) எண்பத்(து) இரண்டு.

உள்ளடக்கம்


1. கொள்கை விளக்கக் குறிப்பு 4

2. நூலேணி

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்) 5

3. தமிழெழுச்சி 6

4.தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை... 7

5. அவ்வப்போது! 8

6. தேன்துளி! 11

7. சேரமன்னர் வரலாறு 14

8. குறளமுதம் 15

9. ஆழங்கண்ட ஆளுமையர்! 16

10. நற்றிணை – ஆங்கிலம் 17

11. குழந்தைக் கவிஞர் பரம்பரை! 18

உள்ளடக்கம்


12. கல்வி என்பது பெருங்கடல் 19

13. Brief Life Sketches Of The European Scholars 20

14. வள்ளுவம்! 21

15. தமிழன்னை நான்மணிமாலை! 22

16. அகலாது அணுகாது பழகுக 23

17. பூ மழை 24

18. அறிவோம்! 29

19. பொருள்களின் இணையப் பயன்பாடுகள் 30

20. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே! 32

21. சட்டவியல் அகரமுதலி! 33

22. புகழ் வணக்கம்! 34

# கொள்கை விளக்கக் குறிப்பு...

97

தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்
(2024 - 2025)

இயல் - 1 (தமிழ் வளர்ச்சித் துறை)

2.8 பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச்சலுகை

தமிழ்மொழிக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்கள் மற்றும் தமிழறிஞர்களுக்குப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. 2013-2014ஆம் ஆண்டு 321 அறிஞர்களுக்கும் 2023-2024-ஆம் ஆண்டு 591 அறிஞர்களுக்கும் ஆக மொத்தம் 912 அறிஞர்கள் இச்சலுகையினைப் பெற்று வருகின்றனர்.


h) Free travel concession in buses

*The Government offers free travel concession in buses to Aged Tamil scholars, Border saviours and Tamil scholars in honour of their contribution for the cause of Tamil language. This concession was extended to 321 scholars in the FY 2013-2014 and 591 scholars for the FY 2023-2024 and in total, 912 Aged Tamil scholars are benefitted.*


# நூலேணி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்








| | |
|---|---|
| நூலின் பெயர் | விவிலியத் தமிழ் |
| நூலாசிரியர் | முனைவர் அ. ஆலிஸ் |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.40/- |
| பக்கங்கள் | 135 |
| வெளியீட்டு எண் | 492 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார் |
| நூலாசிரியர் | வே.இரா. மாதவன் |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.100/- |
| பக்கங்கள் | 192 |
| வெளியீட்டு எண் | 493 |





| | |
|---|---|
| நூலின் பெயர் | தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை |
| நூலாசிரியர் | சா. கிருட்டினமூர்த்தி, ச. சிவகாமி |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.50/- |
| பக்கங்கள் | 160 |
| வெளியீட்டு எண் | 494 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியப் பண்பாடு |
| நூலாசிரியர் | பெ.சு. மணி |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.30/- |
| பக்கங்கள் | 96 |
| வெளியீட்டு எண் | 495 |

# தமிழெழுச்சி...



விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்விகமாம் காட்சியடா!
பெண்ணொருத்தி அங்குநின்றாள்; பேருவகை கொண்டுதான்
கண்ணெடுக்கா தென்னைக் கணப்பொழுது நோக்கினாள்;

– பாரதியார்



உண்ண முடியாதோ ஊராள்வோன் கூர்வாளும்
வண்ணமுடிச் செல்வாக்கும் வந்து மறிக்குதடி!
எண்ணக் கடலில் எழுங்காதல் நீளலைதான்
உண்ணும் மணிக்குளத்தில் ஓடிக் கலக்காமல்

– பாரதிதாசன்





# தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை..!

**"தமிழுக்கும் அமுதென்று பேர் – இந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"**

என்ற புகழ்பெற்ற வைர வரிகளுக்குச் சொந்தக்காரர் புரட்சிக்கவி என்று பலராலும் பாராட்டப்பெறுபவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

ஆசிரியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய பாரதிதாசன் முறையாகத் தமிழ்க் கற்றவர். தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியவர். தமிழ் இலக்கியத்தில் சமூகம் சார்ந்த கருத்துகளை அறிமுகம் செய்த முன்னோடி. தன் உணர்ச்சிமிக்க கவிதைகள் மூலம் புகழ்பெற்றார். பெரும்பாலான கவிதைகளில் சமூக நீதிக்கருத்துகளைப் பாடியமையால் தான் 'புரட்சிக்கவி' என அழைக்கப்பட்டார்.

20ஆம் நூற்றாண்டுத் தமிழ் உலகில் புரட்சிக் கவியாகத் திகழ்ந்தவர். பாரதிதாசன் கவிஞர் மட்டுமல்ல! நல்ல எழுத்தாளரும் கூட. நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், திரைக்கதைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். பாரதியின் அன்பைப் பெற்று அவரின் தொண்டரானார்.

இவர் படைப்புகளில் 'பாண்டியன் பரிசு' தமிழ் இலக்கியத்தில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. மக்களின் மீது இருந்த அன்பைக் 'குடும்பவிளக்கில்' வெளிப்படுத்துகிறார். பாண்டியன் பரிசு நூலைத் திரைப்படமாக்க முயன்றார். பாரதியார் வாழ்க்கை வரலாற்றினைத் திரைப்படமாக்க எண்ணினார். அப்படத்தில் தாமே பாரதியாராகவும் நடிக்க இருந்தார். திரைப்படங்களை உருவாக்க ஓயாது உழைத்த கவிஞரின் உடல்நலம் பாதிக்கப்பட்டு 1964ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் நாள் இயற்கை எய்தினார்.

1982ஆம் ஆண்டு திருச்சியில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்திற்குப் பாவேந்தரின் நினைவாகப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் எனத் தமிழக அரசு பெயர் சூட்டிப் பெருமை சேர்த்தது. தற்போது, பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு, வரும் ஏப்ரல் 29 முதல் மே 5ஆம் நாள் வரை 'தமிழ் வார விழா' கொண்டாடப்படும் எனவும். இந்த ஒரு வார காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தமிழ்மொழியையும் பாவேந்தர் பாரதிதாசனின் பங்களிப்பையும் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும் எனவும் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் கவியரங்கங்களும் கருத்தரங்கங்களும் நடைபெற உள்ளன. அதேபோல், பள்ளிகளில் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளும் புகழ் பெற்ற தமிழிலக்கிய படைப்பாளிகளின் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வரங்கங்களும் நடத்தப்படவுள்ளன. தமிழ் இசை, நடனம் மற்றும் மரபுக்கலைகளை மையப்படுத்திய கலை நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெறும் என்றும் தமிழில் சிறந்து விளங்கும் இளம் கவிஞருக்குப் 'பாரதிதாசன் இளம் படைப்பாளர்' விருதும் வழங்கப்பட உள்ளது.

இன்றும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகத் தன் படைப்புகளால் தமிழைத் தாங்கி நிற்கும் புரட்சிக்கவிஞருக்குத் 'தமிழ் வார விழா' என்ற தலைப்பில் தமிழக அரசு விழா எடுப்பது போற்றுவதற்குரியதாகும்... நமது மொழியின் பெருமையை உலகிற்கு எடுத்துரைத்துத் தமிழ்மொழியை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்ல ஒரு நல்வாய்ப்பாகும். தமிழைத் தன் உயிராக்கி, உணர்வைத் தன் மதியாக்கி புரட்சிக்கவி பாடிய பாவேந்தர் புகழ் ஓங்குக..!

*****



- முனைவர் ஔவை அருள்

# சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை விவரக் குறிப்பு

* தந்தை பெயர் விஸ்வநாத் தத்தா
* தாயார் பெயர் புவனேஸ்வரி தேவி
* 12.01.1863 கொல்கத்தாவில் பிறந்தார்.
* அவருக்கு நரேந்திரநாத் எனப் பெயர் சூட்டப்பட்டது.
* 1881 ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்கிறார்.
* 1886 துறவறம் பூணுகிறார்.
* 1890 இமயமலையில் தனியாகச் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.
* ஜூலை 1890 முதல் டிசம்பர் 1892 வரை ஒரு துறவியாக இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.
* 24.12.1892 கன்னியாகுமரி வந்தடைகிறார்.
* 25–27.12.1892 ஸ்ரீபாத பாறையில் தியானம் செய்து தன் வாழ்க்கையின் பெருநோக்கத்தை உணர்ந்து கொள்கிறார்.
* 31.05.1893 உலக சமய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார்.
* 11.09.1893 சிகாகோவில் உரையாற்றுகிறார்.
* 1893 – 1896 அமெரிக்கா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வேதாந்தம் குறித்துப் பேருரையாற்றுகிறார்.
* 1896 Vedanta Society என்னும் அமைப்பை அமெரிக்காவில் நிறுவுகிறார்.
* 26.01.1897 இராமேஸ்வரத்தில் (பாம்பன்) அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.
* 01.05.1897 இராமகிருஷ்ண மிஷன் அமைப்பை உருவாக்குகிறார்.
* 1898 கொல்கத்தாவில் 'பிளேக்' பெருந்தொற்றின்போது நிவாரணப் பணிகளில் ஈடுபடுகிறார்; சகோதரி நிவேதிதாவும் முனைப்புடன் இப்பணியில் பங்கேற்கிறார்.
* 09.09.1898 பேளூரில் இராமகிருஷ்ண மடத்தை நிறுவுகிறார்.

* மார்ச் 1899 மாயாவதியில் அத்வைத ஆசிரமத்தை நிறுவுகிறார்.
* ஜூன் 1899 – டிசம்பர் 1900 மேற்கத்திய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.
* பாரீசில் சமயங்களின் வரலாற்றுப் பேரவையில் (Congress of the History of Religions) பங்கேற்கிறார்.
* டிசம்பர் 1900 இந்தியாவுக்குத் திரும்புகிறார்.
* 04.07.1902 கொல்கத்தாவில் மகாசமாதி அடைகிறார் (இன்னுயிரைத் துறக்கிறார்)
* சுவாமி விவேகானந்தர் நினைவு பாறை மண்டபத்தின் விவரக் குறிப்பு
* 1962 – 1963 சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம்
* 17.01.1963 விவேகானந்தர் பாறை மீது சிறு திண்டு போன்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, ஒரு நினைவு மண்டபம் அமைப்பதற்கு அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.
* 11.08.1963 விவேகானந்தர் நினைவு பாறை மண்டபக் குழுவில் முதல் அமைப்புச் செயலாளராக ஸ்ரீ ஏக்நாத் ரானடே இணைந்து கொண்டு பொதுமக்களின் பேராதரவைத் திரட்டி நினைவு மண்டபம் அமைப்பதற்கு அரசின் ஏற்பைப் பெறுகிறார்.
* நினைவு மண்டபத்திற்கான நிதி மத்திய, மாநில அரசுகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக அமைப்புகள் மட்டுமல்லாது 30 இலட்சம் பொதுமக்கள் குறைந்தளவு ரூ.1 நன்கொடையாக அளித்து இதனை உள்ளவாறே தேசிய நினைவுச் சின்னமாக மாற்றினார்கள்.
* 06.11.1964 நினைவு மண்டபத்துக்கான முதல் கல் வெட்டப்பட்டது.
* 12.10.1967 அடிக்கல் நாட்டப்பட்டது.
* கட்டி முடிப்பதற்குத் தேவைப்பட்ட மொத்தப் பணிநாட்கள் 2081 (சராசரியாக 650 மனிதர்களைக் கொண்ட 7,83,767 மாந்தர் உழைப்பு நாள்கள்)
* மொத்தப் பரப்பு ஏறத்தாழ 4 ஏக்கர்
* கடல் மட்டத்திலிருந்து உயரம் 55 அடி
* பாறைக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 1600 அடி
* பயன்படுத்தப்பட்ட கற்கள் சிவப்பு மற்றும் நீல நிற கிரானைட் கற்கள் (6000 டன் எடையில்)

* தூண் ஒன்றின் அதிகபட்ச எடை13 டன்

* தலைமைக் கட்டடக் கலைஞர் (ம) பொறியாளர் ஸ்தபதி திரு எஸ்.கே. ஆச்சாரி, காரைக்குடி, தமிழ் நாடு

* சிலை வரைபடம் திரு. எஸ்.எம். பண்டிட், மும்பை

* சிலை வடித்தவர் திரு. என்.எல். சோனாவடேகர், ஜே.ஜே. கலைப்பள்ளி, மும்பை

* 02.09.1970 ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் அமைப்பின் தலைவர் சுவாமி வீரேஸ்வரானந்தா அவர்களால் குடமுழுக்கு செய்யப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி.வி. கிரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.













# தேன்துளி - 1

**எனது பிரயாண அனுபவம்:**

**இவ்வளவு முதியவராக இருக்கலாமா?**


எனது பிரயாண அனுபவம்
இவ்வளவு முதியவராக இருக்கலாமா?

தமிழ்நாட்டின் தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்புத் துறையின் இயக்குநராகப் பணியாற்றி வரும் திரு. ஔவை நடராஜனை தமிழ் கூறும் நல்லுலகில் பலர் ஒரு பேச்சாளர் என்றே அறிவர்.

மகளிர் கல்லூரிக் கூட்டங்களுக்கு இவர் குமரி அனந்தனுடன் சொற்பொழிவாற்றச் சென்றால், “ஔவையும் குமரியும் பேச வத்திருக்கிறார்கள்!" என்று குறிப்பிடுவது வழக்கம்.

இவரது தகப்பனார் பேராசிரியர் ஔவை துரைசாமியும் சிறந்த பேச்சாளர். அதுவே பல சந்தர்ப்பங்களில் குழப்பத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது என்று கூறும் திரு நடராஜன் குறிப்பிடும் சில சுவையான நிகழ்ச்சிகள்:

*1961*ஆம் ஆண்டு தூத்துக்குடி செந்தமிழ்ச் சிவநெறி மன்றத்தினர் என் தந்தையின் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தனர்.

ஆனால் கடிதம் எனக்கு எழுதி அழைத்தனர்.

நான் தூத்துக்குடி சென்றதும் என் தந்தையாரை எதிர்பார்த்த அவர்களுக்கு என்னைப் பார்த்ததும் வியப்பாக இருந்தது.

நான் சொற்பொழிவாற்றிவிட்டுத் திரும்பினேன்.

அடுத்த வருடம் கடலூர் உயர் நிலைப் பள்ளியில் என்னைப் பேச அழைத்திருந்தனர்.

எனக்குப் பதில் என் தந்தை கடலூர் சென்று பேசிவிட்டு வந்தார்.

'நீங்கள் இவ்வளவு முதியவராக இருக்கிறீர்களே?' என்று என் தந்தையிடம் கேட்டார்களாம், என்னை மனத்தில் நினைத்துக்கொண்டு.

சேலம் குகை திருவள்ளுவர் கழகத்தில் என்னைப் பேச அழைத்திருந்தார்கள். பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்து செல்லும்போது ஒரு ஜட்கா வண்டி என்னை மோதித் தள்ளி விட்டது.

நெற்றியில் சிறிது காயம். அதைப் பொருட்படுத்தாமல் நான் பேசத் துவங்கினேன்.

பதினைந்து நிமிடங்கள் பேசிய பிறகு எனக்கு மயக்கமாக வந்தது.

மேற்கொண்டு பேச முடியவில்லை.

நான் பேச ஆரம்பித்து ஆனால் பேசி முடிக்க முடியாமல் போன ஒரே கூட்டம் அதுதான்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவாற்றப் போயிருந்தேன்

சாஸ்திரி ஹாலில் கூட்டம்.

பதிவாளர் அறைக்கு வெளியே என் செருப்புகளைக் கழற்றி வைத்து விட்டுப் பேசப் போனேன்.

மறந்து போய் செருப்பை அங்கேயே விட்டு விட்டுச் சென்னைக்குத் திரும்பி விட்டேன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு அதே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இலக்கிய மன்றத்தில் சொற்பொழிவாற்ற நான் போன போது, என் செருப்புகள் அதே இடத்தில் இருக்கக் கண்டு வியந்தேன்.

பம்பாயில் திருவள்ளுவர் மன்றத்தில் பேசிவிட்டு இரா. ஜனார்த்தனத்துடன் திரும்புகையில் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது.

அன்று சுமார் இருபத்தைந்து கோக கோலா புட்டிகள் வாங்கிப் பருகினேன் என்றால், எனக்கு எத்தனை தாகமாக இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்!

மன்றச் செயலாளர் என்னை டாக்டரிடம் அழைத்துச் சென்றார்.

அன்று என்னை அவர் பரிசோதனை செய்த போதுதான், எனக்கு நீரிழிவுநோய் இருக்கிறது;

நான் ஒரு டயபெடிக் என்ற திடுக்கிடும் உண்மை எனக்குத் தெரிய வந்தது!

நான் எந்தக் கூட்டத்துக்குப் பேசப் போனாலும் என்னுடன், இரண்டு மூன்று நண்பர்கள் இருப்பது வழக்கம்.

சொற்பொழிவுக்குப் போன சந்தர்ப்பங்களில் பல அரிய நண்பர்கள் எனக்கு ஏற்பட்டது உண்டு.

கவிராஜ பண்டிதர் ஜெக வீர பாண்டியனுடன் ஒரு கூட்டத்தில் பேசப் போயிருந்தேன்.

அவர் மிகப் பெரிய மனிதர். அன்றுதான் அவரை முதன் முறையாகச் சந்திக்கும் பேறு பெற்றேன்.

கதிர் ஆசிரியர் திரு நா. பார்த்தசாரதியுடன் திருச்செங்கோட்டில் ஒரு சொற்பொழிவுக்காகக் காரில் போயிருந்தேன்.

திருச்செங்கோடு போய்ச் சேரும் வரையில் எங்களிடையே ஒரே பேச்சுத்தான். மறக்க முடியாத பயண அனுபவம் அது. கூட்டங்களுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் புதிய நண்பர்களைப் பெறுவது ஒரு ப்ளஸ் பாயிண்ட் என்றால் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் இழப்பதையும் குறிப்பிட வேண்டும் அல்லவா! ஒரு கூட்டத்துக்குப் போய் ஒரு சட்டையையோ, புத்தகத்தையோ நான் தொலைக்காமல் வந்ததில்லை!

சென்னை செயின்ட் மேரிஸ் ஹாலில் பிரதாப முதலியார் சரித்திரம் நூல் வெளியீட்டு விழா. அறிஞர் அண்ணா பேசி நூலை வெளியிடவிருந்தார். அவர் வர சுமார் 30 நிமிடங்கள் தாமதமாயிற்று.

பச்சையப்பன் கல்லூரி ஔவை நடராஜன் மாணவர் இங்கே வந்திருந்தால், மேடைக்கு வந்து பேசுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று ஓர் அறிவிப்பு ஒலி பெருக்கியில் வந்தது.

நான் சுமார் 25 நிமிடங்கள் பேசினேன்.

நான் பேசிக்கொண்டிருக்கையில் அண்ணா வந்தார். அவர் மேடைக்கு வந்தவுடன், 'உம் பேசு!' என்றார். மேலும் சில நிமிடங்கள் பேசி முடித்தேன். எனக்கு அளிக்கப்பட்ட பெரிய கௌரவமாக இந்நிகழ்ச்சியைக் கருதுகிறேன்.

பேட்டி: பாணன்

# தேன்துளி - 2

## காந்தி நினைவு அருங்காட்சியகம்



மதுரையில் உள்ள தற்போதைய காந்தி நினைவு அருங்காட்சியகம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடமாகும். இது நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த இராணி மங்கம்மாளின் அரண்மனையாக இருந்தது. தமுக்கம் அரண்மனை என்று அழைக்கப்படும் இது கி.பி. 1670இல் கட்டப்பட்டது, 13 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்த அரண்மனை, கட்டடக்கலை நேர்த்திக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது, இது ஒவ்வொரு பார்வையாளரையும் கவர்ந்திழுக்கிறது.

******



# சேரமன்னர் வரலாறு! 220

- உரைவேந்தர் ஔவை துரைசாமி

## 19. சேரமான் கணைக்கால் இரும்பொறை

சேரலாதனும் சிறிது போதில் உயிர் துறந்தான். அதனைக் கண்ட கழாத்தலையார் மனம் கரைந்து,

**"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்**
**தாம்மாய்ந்தனரே; குடை துளங்கினவே;"**

என்று சொல்லி, இருவரும் ஒருங்கே இறந்ததைச் சுட்டி,

**"பன்னூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞலம்**
**இடங்கெட ஈண்டிய வியன்கண் பாசறைக்**
**களம்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர் என்றும்**
**உடன்வீழ்ந் தன்றால் அமரே"**

அவ் வேந்தருடைய மனைவியரும் பின்னே உயிருடன் இருந்து கைம்பெண்களாய் வாழ்வதை

**"பெண்டிரும்,**
**பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்**
**மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே"**

என்றும் பாடி வருந்தியுள்ளார்.

பரணர் என்னும் சான்றோர், அவர்களுடைய வீழ்ச்சி கண்டு மன நோய் மிகுந்து, யானைப்படை; குதிரைப்படை, காலாட்படை யாவும் வீழ்ந்தது கூறி, அரசர் இருவரும் வீழ்ந்த நிலையை,

**"சாந்தமை மார்பில் நெடுவேல் பாய்ந்தென,**
**வேந்தரும் பொருது களத்து ஒழிந்தனர்"**

என்று எடுத்துரைத்தார். அப்போது அவர்களை இழந்த நாடுகளின் நலத்தை எண்ணி, அவர்களுடைய நல்லரசால் நல்வாழ்வு பெற்று இனிதிருந்த நாடு என்னாகுமோ? என ஏங்கி,


**"இனியே**
**என்னா வதுகொல் தானே கழனி**
**ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்**
**பாசவல் முக்கித் தண்புனல் பாயும்**
**யாணர் அறாஅ வைப்பின்**
**காமர் கிடக்கை அவர் அகன்றலை நாடே"**

எனக் கையறுகின்றார்.

வளரும்...



# குறளமுதம்!




78

## திருக்குறள் அறத்துப்பால்

– நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை

### 9. திருவள்ளுவரும் திருக்குறளும்

அத்தகைய புலவர்களை இரந்துண்டு வாழ வைத்த கொடுமையால்,

**இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து**
**கெடுக வுலகியற்றி யான்**

என்று பிரம்மனுக்குச் சாபங் கொடுக்கின்றார். இவருடைய வெறுப்பு முழுவதும் சேர்ந்து, 'இன்மை யெனவொரு பாவி' என்று வையும் பாட்டில் வெளிப்படுகின்றது.

### அழுக்காற்றை வெறுத்தல்

வறுமையைப் பாவி யென்று வைத்தது போலவே அழுக்காற்றையும் பாவியென வெறுக்கின்றார்.

**அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி யுய்த்து விடும்**

என்று கூறுவதைக் காண்க. இதனால் பொறாமைக் குணத்தையும் இவர் அதிகமாக வெறுத்தார் என்று தெரிகிறது. உலகத்தினர் ஒருவரை இழித்துரைக்கும்போது, 'துணிக்கும் பிண்டத்துக்கும் இல்லாமல் நாசமாகப் போகவேண்டும்' என்று வைகின்றார்கள். இதே வெறுப்போடு அழுக்காறுடையாரை,

**கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்**
**உண்பதூஉ மின்றிக் கெடும்**

என்று அழகிய மொழிகளால் இவர் திட்டுகின்றார். ஒழுக்கமில்லான்கண் உயர்வில்லை என்பதற்கு அழுக்காறுடையான்கண் ஆக்கமிலாமையை உவமை கூறும்போது இவருக்கு அதன்பாலுள்ள வைரம் நன்கு காணப்படுகின்றது. இது மட்டுமா? அறத்திற்குக் குறைபாடுகளென்று கூறும் நான்கனுள்,

**அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா வியன்ற தறம்**

என்று தெரிவிக்கையில் அழுக்காற்றை முதலிற் கூறி அதன் இழுக்கை மிகுதிப்படுத்தி காட்டுகின்றார்.

### சமற்காரம்

சமற்காரமாக நீதியைக் கூறும் இடங்கள் திருக்குறளில் பல உண்டு.

**செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு**

என்பதில் ஒருவன் விருந்தோம்பி வாழ்வானாயின் அவனே இன்னும் சிறந்த நிலைமையுடையாருக்கு விருந்தினாவானென்று கூறும் முகத்தால் சுவர்க்கபோகத்தை அவன் பெறுதல் குறிப்பிக்கப்படுகிறது.

வளரும்...



84

# ஆழங்கண்ட ஆளுமையர்...

- ஔவை நடராசன்

## திருவாசகமணி – திரும்புமா? இனி!

சுமார் பதினைந்து நாள், அவர் அங்குத் தங்கியிருந்தார். அப்போது அவருடன் இருந்தவர். கோலாலம்பூரில் இருந்து வந்த அம்மையார் திருமதி சரளாதேவி. அந்த அம்மையார் அணுக்கமான தொண்டராக இருந்து, அவர் எதைச் சொன்னாலும், எழுதி வைத்துக் கொண்டு முறையாகச் செய்வார்.

பெரிய டேப் ரிக்கார்டர், வானொலி, கைக்கடிகாரம் என்று எல்லாமே மலேசியாவில் இருந்து வந்த விலையுயர்ந்த பொருளாக இருக்கும். திருவாசகமணி பலருக்கு உதவி செய்திருக்கிறார். வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்த டாக்டர் இலட்சுமி, இன்னொரு அம்மையார் இருவரும் தொண்டர்களைப்போல், திருவாசகமணியைப் பார்க்க, வந்து போவார்கள்.

இரண்டு இளைஞர்கள் அவரிடம் எடுபிடிகளாக வேலை பார்த்தார்கள். ஒரு மன்னர் எப்படி வாழ்வாரோ, அதுபோலத்தான் அவர் இருந்தார். அவர் சாதாரணப் பொருள்களைச் சாப்பிட மாட்டார். இலண்டன், ஜெர்மனியில் இருந்து வந்தவை என்று பிஸ்கட்டுகளை என்னிடம் தருவார். நானும் அவரோடு தங்கியிருக்கிறேன். திருக்குறளைத் தான் எவ்வாறு படித்து மொழிபெயர்த்தேன் என்பதைப் பல சான்றுகள் காட்டிச் சொன்னார்.

அவரது முன்கோபத்தினால், அப்போது ஏதோ ஒரு சிக்கல் வந்தது. அவர் பெரிய புராணப் பாடல்களில் 150 பாடல்கள் எழுதியிருந்தார். பதினைந்து நாள்கள் கழித்து, நான் திருச்சிக்குப் போகிறேன் என்று சொன்னார். அந்தச் சமயத்தில், ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலக் குறிப்புகளைத் தொகுத்து, இரண்டு பெரிய பெட்டிகளில் வைத்திருந்தார். அவர் எங்குச் சென்றாலும், அந்த இரண்டு பெட்டிகளை எடுத்துக்கொண்டே போவார்.

இரண்டு நாள்களில் வரப்போகிறீர்கள். எதற்கு அந்தப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போகிறீர்கள் என்று நான் அவரிடம் கேட்டேன். இவை என்னோடு புதைக்கப்பட வேண்டியவை. இது போன்ற விஷயங்களில் எவரும் தலையிடக் கூடாது என்றார். திராவிடம், பெரியாரின் கருத்துகளை ஆங்கிலத்தில் சொல்வது, தமிழக இலக்கியங்களை உயர்ந்த ஆங்கிலத்தில் சொல்வது என்று பிற மொழிக்காரர்களுக்குத் திராவிடச் சிந்தனைகளைத் தெரிவிக்க வேண்டுமென்றும், அதற்குத் தன்னை ஒரு தூதுவனைப்போல நாடாளுமன்ற மேலவையில் நியமிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

ஒருமுறை கலைஞரைக்கூட போய்ப் பார்த்தோம். தனக்கு இராஜ்யசபா உறுப்பினர் பதவி வேண்டும் என்று திருவாசகமணி, அவரிடம் கேட்டார்.

வளரும்...

# நற்றிணை – ஆங்கிலம்! 242

## நற்றிணை - 371

தலைவன் பாகனிடம் கூறுதல்

முல்லை ஔவையார்

காயங் குன்றத்துக் கொன்றை போல,
மா மலை விடர் அகம் விளங்க மின்னி,
மாயோள் இருந்த தேம் நோக்கி,
வியல் இரு விசும்பு அகம் புதையப் பாஅய்,
பெயல் தொடங்கினவே , பெய்யா வானம்:
நிழல் திகழ் சுடர்த் தொடி ஞெகிழ ஏங்கி,
அழல் தொடங்கினளே ஆயிழை; அதன்
எதிர்,
குழல் தொடங்கினரே கோவலர்
தழங்கு குரல் உருமின் கங்குலானே.

## Natrinai - 371

HE...

mullai. auvaiyAr

kAyA hill laurel chains dangle!
They torch the clefts bare;
clouds wet lady's zone; angle
the skies and pour to fill!
Bournes airy carry secrets more!
Bangles loosen; slip all wear!
She weeps! Eyes teary and sore!
Gay neatherds flutes blare and roar!
It thunders! Steer fast. I can't bear!

To Continue...

*Prof Sanakaranarayanan is a retired professor in english and a doyen in english language and letters,besides his eminence in tamil and sanskrit,his knowledge of english is surpassing,the difficulty is he always make a fish to roar like a lion! his pedantic style is inevitable. Keep a dictionary read his lines.*

*He has attempted renderings for Saiva Siddhantha treatises, Periyapuranam, Sangam verses and he has penned his rendering the modern poet Erode Tamilanban verses.*

*He resides in Kumbakonam and I always cherish his scholarship as he guided my Doctoral Dissertation on Bard of Avons plays in tamil...*



# குழந்தைக் கவிஞர் பரம்பரை! 249

– முனைவர் தேவி நாச்சியப்பன்

வே.இரா. சிவஞான வள்ளல் ஆசிரியராகப் பணியாற்றியவர். வேலூரில் வாழ்ந்த இவர் 'வேலூர் வள்ளல்' என்ற புனைபெயரில் எழுதியுள்ளார். குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் சிறிய சிறிய நூல்களாகச் சிறுவர் பாடல்களை வழங்கியுள்ளார்.

'மழலைச் செல்வம்', 'அரும்பு' 'சிட்டு', 'பாப்பா', 'கதைப்பாட்டு' 'குழந்தைகளுக்கு அண்ணா', 'வாழ்விக்க வந்த வான்மலர்' போன்ற நூல்களை 10 அல்லது 12 காசு விலையில் வெளியிட்டுள்ளார் என்பது சிறப்பு.

எளிய சொற்களில் குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டும் வகையில் பல பாடல்களை எழுதி இருக்கிறார்.

'வானம்பாடி', 'கவிஞன்', 'பரிசில்', 'அமுதசுரபி', 'சௌபாக்கியா', 'தியாக பூமி' இதழ்களில் இவருடைய கவிதைகள் வெளிவந்துள்ளன.

"அம்மா எனக்கொரு சந்தேகம்" என்றொரு பாடல்:

"அழகிய அணிலின் அருகே சென்று
மழலை மொழியில் மகிழ்வுடன்
அழைத்தேன்!
அம்மா எனக்கொரு சந்தேகம்!
அதுஏன் பயந்து போகிறது?
பச்சைக் கிளியின் பக்கம் சென்று
இச்சை யாக இரங்கி அழைத்தேன்!
அம்மா எனக்கொரு சந்தேகம்!
அதுஏன் பயந்து போகிறது ?
தும்பியின் அருகே துள்ளிச் சென்று




நம்பி அழைத்தேன்! நட்புடன்
அழைத்தேன்!
அம்மா எனக்கொரு சந்தேகம்!
அதுஏன் பயந்து போகிறது?
இன்னிசை பாடும் இனிய வண்டிடம்
என்னுடன்இணைந்து பாடு என்(று)
அழைத்தேன்!
அம்மா எனக்கொரு சந்தேகம்!
அதுஏன் பயந்து போகிறது?"
சிட்டுக்குருவியின் எட்ட இருந்தே
சிட்டே அருகே வாஎன்(று)
அழைத்தேன்!
அம்மா எனக்கு ஒரு சந்தேகம்!
அதுஏன் பயந்து போகிறது?
அணிலும் கிளியும் தும்பியும் வண்டும்
மணிக்கண் சிட்டும் வரவே இல்லை !
அம்மா எனக்கொரு சந்தேகம்!
அச்சம் அவற்றுக் கேனம்மா?

–வே.இரா. சிவஞான வள்ளல்

குழந்தையின் சந்தேகத்தைச் சந்தம் நிறைந்த எளிய பாடலாகத் தந்துள்ளார்.

*****

# கல்வி என்பது பெருங்கடல்



- பேராசிரியர் செ.இரா.செல்வகுமார், கனடா

33

**19th Century Reforms:**

*Nineteenth-century reforms, including the Education Act of 1870, expanded education provision and introduced widespread state-funded schools, marking a turning point in the provision of universal instruction.*

*The Act made secular elementary education freely available to all and established school boards to build and manage schools.*

*By the 1880s, education became compulsory for children aged 5 to 10, with the school leaving age progressively raised.*

*Despite legislation aimed at providing education for all, the provision of schooling struggled to keep up with population growth in urban areas, and the quality of education remained uneven.*

*In 1840, it was reported that only one-third of working-class children could read "fairly" and that no more than 50% regularly attended school.*

*In 1843, it was estimated that only two-thirds of adult males and less than half adult females had a basic literacy.*

**Early 20th Century:**

*The 1902 Education Act further expanded state involvement in education, but secondary education was still largely controlled by county councils and access was restricted.*

*The 1918 Education Act made schooling for all disabled children compulsory.*

*The raising of the school leaving age to fourteen, as required by the 1918 Education Act, had been postponed because of economic problems, and finally came into force in October 1922.*

வளரும்...

# BRIEF LIFE SKETCHES OF THE EUROPEAN SCHOLARS

- Mahavidvan **Meenakshi Sundaram**

## 3. CONSTANTIUS JOSEPH BESCHI

*Constantius Joseph Beschi was born on the 8th of November 1680, at Castiglione-delle-Stiviere, a town in the Republic of Venice. Count Gandolfo Beschi was his father, and Elizabeth Beschi his mother. Our knowledge of Beschi's early years and childhood is negligible. In October, 1698 he entered the Society of Jesus at the young age of 18 and after completing his literary studies did philosophy for one year.*

*In 1700, he taught grammar at Ravenna. Probably this was his first assignment. A year later, in 1701 he resumed the study of philosophy at Bologna; then for three years he taught grammar and humanities. He was well versed in Italian, Latin, French, Greek, Hebrew, Portugese and Sanskrit. Hindustani he learnt later. From his early years, he displayed a remarkable genius to learn and master numerous languages but this phenomenal genius reached its highest water-mark in Tamil.*

******



- மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்

# 9. வள்ளுவ அரசு

அரசுத் தலைவனை ஒரு நாட்டின் மக்கள் தலைவன் என்றோ, ஆன்று அவிந்து அடங்கிய சான்றோன் என்றோ பொதுவாகச் சொல்லுவதற்கு இல்லை. அரசின் உள்ளும் புறமும் தலைமை சான்றோர், நேரு பெருமகன் போலும் தவச்செலரே யாவர். கல்வியானும், அறிவானும், ஒழுக்கத்தானும், பரந்தோங்கிய புகழானும், செயற்றிறத்தானும் செல்வாக்குடையோர் குடிமக்களுள் பலரிருப்பர். அரசுத்தலைவன் மக்கட் பெரியோர்களை என்றும் தழுவிக் கொள்ளல் வேண்டும்; அன்னோர் செவி கைப்பக் கழறினும் பொறுத்துக் கேட்டொழுகும் அடக்கம் வேண்டும்; தன்னை ஆட்சித் தலைவனாக எண்ண வேண்டுமே யொழிய, நாட்டுத் தனிப்பெருந் தலைவனாக மயங்கிப் படையாற்றலை நம்பிக் கிடத்தல் ஆகாது என்பது வள்ளுவ அரசியலின் உளோட்டம். பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை என்ற அதிகாரங்களால், அரசுத் தலைவன் பற்றுக்கோடும் அழிவும் சுட்டுவர். அவன் உண்மைப் பெரியோனல்லன்; அவனினும் பெரியோர் குடிமக்களுள் உளர் என்று நினைவுறுத்துவர்.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்

என்பதனால், குடிப்பெரியோர் திருக்குறளரசின் உள்ளுறுப்பினர் என்பது தெளிவு.

இடுப்புரையாலர் செங்கோலரசிற்கு இன்றியமையாதவர் என்பது வள்ளுவம். 'தக்காரும் சேர்வது நாடு' (731) என்றால் காண்க. இடுப்பாரை விலக்கி முழுதும் ஒத்தூதுவாரைத் தழுவும் அரசு கொடுங்கோலாய் இழியும்; நிலக்குப் பொறையாய்விடும். ஆசிரியர் வேண்டும் இடிப்பாளர் 'பல் குழுவும், பாழ் செய்யும் உற்பகையும், வேந்து அலைக்கும் கொல் குறும்பும்' (735) என்ற இனத்திற் சேராதவர்; நாட்டன்பினர்; இன்று காணும் எதிர்க்கட்சியாலர். 'குடிப்பெரியோரையும், இடிப்பறிஞரையும் கேண்மை கொள்க' என்பது எவ்வகை அரசியலுக்கும் உரிய வள்ளுவம் அன்றோ?

வளரும்...



152

# தமிழன்னை நான்மணிமாலை


- செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி **பிரபாகரபாபு**
சங்க இலக்கிய ஆய்வறிஞர்


**"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்"** – (குறள் 468)

"தக்க வழியில் மேற்கொள்ளாத முயற்சி, பலர் நின்று பாராட்டினாலும் பின்னர் முடங்கி விடும்" என்பது வள்ளுவர் காட்டும் வாழ்க்கைச் செல்வழி. இதுவே எத்தகைய முயற்சியை முனைந்து செய்தாலும் பின்பற்றி நடக்க வேண்டிய நல்மொழி. இக்கோட்பாட்டிற்குள் பல உயர்ந்த தத்துவங்கள் அடங்கும். முறையாகத் திட்டமிடாச் செயலை எவ்வளவுதான் போற்றினாலும் இறுதியில் நிறைவடையாமலே முடங்கும்.

செய்யவிருக்கும் செயல்களை நன்கு தெரிந்து அணுகிச் செய்வதால் மட்டுமே கிட்டும் வெற்றி. சிறப்பாகச் செய்து முடிப்போர்க்கு மட்டுமே என்றும் பெருமிதத்தால் நிமிர்ந்திருக்கும் நெற்றி. செயலைச் செய்யத் தொடங்குமுன் அதன் தொடர்பான அனைவரின் பண்புகளையும் அறிந்திருந்தால் வெற்றிகள் சேரும். அவ்வாறு அணுகாவிடில் அச்செயலுக்குப் பொருந்தாத எவர் ஒருவராலும் தீங்குகள் நேரும்.

பல்லோருக்கும் ஏற்புடைய செயலையே தேர்ந்து செய்தல் நலம் பயக்கும். பிறரோடு இணங்கிவராத எதைச் செய்தாலும் இறுதியில் அது மன அமைதியைப் பறிக்கும். "சிந்தித்து ஆராய்ந்து செயல்களைச் செய். அதனால் மட்டுமே வெற்றியும் புகழும் கிட்டும் என்பதே மெய்" என்று வள்ளுவர் வழி உணர்த்தினாள் அன்னை. அன்னைக்கு எனது அன்பான பாமாலை.

## அகவல்

திறம்பெற வைத்தாள் திரைகடல் செய்யும்
மறம்பெற வைத்தாள் மகிழுறும் வகையில்
அறம்செய வைத்தாள் ஆளுமை என்னும்
நிறம்பெற வைத்தாள் நிறைவுகள் காண
சிறந்திட வைத்தாள் செற்றார் வஞ்சம்
மறந்திட வைத்தாள் மாண்பிலா நட்பைத்
துறந்திட வைத்தாள் புகழெனும் வானில்
பறந்திட வைத்தாள் படைப்புகள் என்னில்
கறந்திட வைத்தாள் கற்பனை உலகைத்
திறந்திட வைத்தாள் திடமுடைப் பாக்கள்
சுரந்திட வைத்தாள் சுடர்நிறை அறிவை
இரந்திட வைத்தாள் இனியோர் பலரிடம்
உரம்பெற வைத்தாள் உண்மைகள் பெருக்கி
வரம்பெற வைத்தாள் வளமிகு பாக்களின்
சரம்பெற வைத்தாள் சாய்ந்திடா உள்ளத்
தரம்பெற வைத்தாள் தமிழ்த்தாய் எனக்கே
பிறந்திட வைத்தாள் பெற்றெனை ஈன்று
புறந்தர வாழ்ந்தவள் புகழ்மிக இனிதே
உறங்குதல் இன்றி உயிர்ப்புடன்
பிறங்கிட வைத்தாள் பெருமைகள் கொண்டே

## வெண்பா - 156

கொண்டேன் பெருமிதம் கொள்கைப் பிடிப்புடன்
கண்டேன் இனிமையைக் கற்பனையால் - உண்டேன்
அமிழ்தத் தமிழை அதனால் செழித்தேன்
தமிழால் வளர்ந்தேன் தழைத்து.

## கட்டளைக் கலித்துறை

தழைத்தேன் சிறந்தேன் தமிழால் மலர்ந்தேன் தகைமையினால்
பிழைத்தேன் உயர்ந்தேன் பெரிதும் வளர்ந்தேன் பிழையறவே
அழைத்தேன் அருள்நிறை அன்னையை நாளும் அறிவொளிர
உழைத்தேன் அனைத்தும் உணர்ந்தேன் நிலைத்தேன் உயிர்ப்புடனே.

## விருத்தம்

உயிர்ப்பு குறையா உளமும் உரமும்
உடையார்க் கில்லை ஒருகுறையே
அயர்வை விரட்டி அறிவை நிறைவாய்
அடைந்தார்க் கில்லை அவமெதிலும்
துயர்கள் விலக்கித் தொடர்ந்தே கடமை
தொடர்ந்தார்க் கில்லை தொய்வுகளே
செயலில் கவனம் செலுத்தி மதியில்
சிதையார்க் கில்லை சிறுதளர்வே

129

# அகலாது அணுகாது பழகுக



- புலவர் தி.வே.விஜயலட்சுமி

ஒரு நாட்டின் தலைவர் அல்லது நாடாள்வாரிடம், அதிகாரிகள், பணியாளர்கள் பழக வேண்டிய முறைமைகளைத் திருவள்ளுவப் பெருமான் நயம்பட விளக்குகிறார். இறைமாட்சியில் நாடாள்வான் இயல்பைச் சொல்லும்போது அனைவரும் காண்பதற்கு எளியவனாய் இருக்க வேண்டும் என்றும், யாரிடத்தும் கடுஞ்சொற்கள் கூறாமல் இன்சொல் சொல்ல வேண்டும் என்றும் கூறுகிறார். இவ்வாறு எளியவனாய், இனியனவாய் ஒர் ஆட்சித் தலைவன் நடந்து கொண்டால், அவனைக் காண வருவோர் எண்ணிக்கை பெருகிவிடும். அதனால் அவர்களைக் கண்டு இன்சொல் கூறிப் பழகுவதிலேயே தலைவன் காலமெல்லாம் கழியும்.

தன் கடமைகளை ஆராய்ந்து திறம்படச் செய்ய வேண்டிய அமைதியும் வாய்ப்பும் இல்லாமல் போகிவிடும். அதனால் ஆட்சியாளரை நெருங்கிப் பழகும் முறையைத் திருவள்ளுவர் மன்னரைச் சேர்ந்தொழுகல் என்ற அதிகாரத்தில் நயம்படக் கூறுவதை இக்கட்டுரை வழிக் காண்போம்.

## மன்னரைச் சார்ந்து ஒழுகல்

தலைவரைச் சேர்ந்து ஒழுகல் என்ற தொடருக்குத் தலைவரைப் பொருந்தி நடக்கும் முறை என்று பொருள் கூறுதல் ஏற்றது. அக்காலச் சொல்லை விட்டு தற்காலத்திற்கு ஏற்றவாறு பொருள் கொண்டால் மன்னர் என்ற முடியாட்சிக் காலத்துச் சொல்லை ஆட்சித் தலைவன் என்று வழங்குவதே பொருத்தமுடைத்து என்பது அறிஞர்கள் கருத்து.

*********




இப்படி ஒரு மின்னிதழ் வெளிவருமா...

வர முடியுமா ...

அல்லது வெளிவராதா...?

என எதிர்பார்த்த காலகட்டத்தில் உலகத்தமிழ் மின்னிதழ் தொடங்க... தொடர்ந்து நடத்த... ஊக்கம் அளிக்க தமிழறிஞர் ஐயா ஔவை நடராசன் அவர்களின் 90ஆம் பிறந்தநாளைக் குறிப்பிடும் வண்ணம் அவரது பல்வேறு ஒளிப்படங்களைத் தொகுப்பு மாலையாக இணைத்து முகப்பொவியமாக உலகத்தமிழ் மின்னிதழ் 281இல் வெளியிட்டு இருப்பது பொருத்தம்தான்.

இந்த இதழ் 23.04.2025 அன்று வெளியாகி இருக்கிறது.

இந்த நாள் உலகப் புத்தக நாள் என்பதை நாம் அறிவோம்.

அதனைக் குறிப்பிடும் விதமாக ஆசிரியம் பகுதியில் ‘வாசிப்போம் நேசிப்போம்’ என்கின்ற தலைப்பில் சிறப்பானதொரு கட்டுரை வெளியாகியிருப்பது பொருத்தமானதுதான்.

பாவேந்தர் பாரதிதாசன், மார்ட்டின் லூதர் ஆகியோரின் பொன்மொழிகளைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையைத் தொடங்கி இருப்பது வரவேற்கத்தக்கதுதான்.

இன்னும் புத்தக வாசிப்பு பற்றி மாவீரன் பகத்சிங் அவர்களைத் தொட்டிருப்பதும் கூடுதல் சிறப்புதான்.

இன்னும் நான் சொல்லுவேன்... அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா ஆசியுரையும் தொட்டிருக்கலாம் இந்த இடத்தில்.

என்றாலும் கட்டுரை முழுமையாகப் புத்தக வாசிப்பினை வலியுறுத்தும் விதமாக அமைந்திருப்பது போற்றத்தக்கதுதான்.

வாசிக்காத நாள் வசிக்காத நாள் என சொல்லுவார்கள்...

அப்படிப்பட்ட புத்தகத்தை நாள்தோறும் படித்து விட நாம் முயல்வோம்.

குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினர் மத்தியில் சமூக ஊடகங்கள் அதிகமாக புழங்கி வருகின்ற காலகட்டத்தில் வாசிப்பு என்பது குறைந்தாலும் அதனின் முக்கியத்துவம் என்பது குறையவில்லை என்பதுதான் இதில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது.

உலகப் புத்தக நாளை முன்னிட்டு இந்தக் கட்டுரை எழுதப்பட்டு இருந்தாலும் அந்த உலகப் புத்தக நாள் ஏப்ரல் 23 என்பதைக் குறிப்பிடாமலேயே குறிப்பாகவே உணர்த்தப்பட்டு இருக்கிறது.

முன்னதாக வெளியாகி இருக்கும் கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதியில் தமிழறிஞர்கள், எல்லைக் காவலர் ஆகியோருக்கு ஈமச்சடங்குத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்ற செய்தி என்னைப் பொறுத்த அளவில் புதிய செய்தியாகும்.

ரூபாய் 5000 விதம் 85 நபர்களுக்கு வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கும் செய்தியும் புதிய செய்திதான்.

அவ்வப்போது பகுதியில் இயக்குநர் அருள் அவர்கள் அருட்செல்வருக்கான புகழ்க் கவிதையைச் சிறப்பாகத் தீட்டி இருக்கிறார்.

தேன் துளி பகுதியில் முதல் துளியில் மகப்பேறு அறையை சங்க இலக்கியத்தைத் தொட்டு காண்பித்து "ஈனில்" எனச் சொல்வது பொருத்தம்தான் என்பதும், அந்த மகப்பேருக்கு உதவி செய்கின்ற நர்சுகளுக்கு வள்ளுவத்தைத் தொட்டு "உழைச்செல்வார்" எனலாம் என்ற செய்தி நம்மை வியக்க வைக்கிறது.

தேன் துளி இரண்டில் கடந்த ஆண்டு அமெரிக்காவில் சுமார் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து படித்த மாணவர்களின் தொகையில் கால்பங்குக்கும் அதிகமானோர் இந்திய மாணவர்கள் என்கின்ற செய்தி ஒரு மகிழ்ச்சியைத் தருகிறது.

திருவாசகமணியின் எழுத்தாற்றல் கடந்த வாரத்தில் படித்தது போல இந்த வாரமும் படிக்க முடிகிறது ஆழங்கண்ட அற்புதங்கள் என்கின்ற பகுதியில்.

நற்றிணை - ஆங்கிலம், சேர மன்னர் வரலாறு ஆகிய பகுதிகள் தொடர்ந்து வருகின்றன... வரவேற்பைப் பெறுகின்றன.

ஆ.வீரராகவன் என்கின்ற பள்ளி ஆசிரியரைக் குழந்தைக் கவிஞர் பட்டியலில் இந்த வாரம் சேர்த்து தந்திருக்கிறார் முனைவர் தேவி நாச்சியப்பன்.

ஆசிரியர் ஆ. வீரராகவன் எந்த மாவட்டம், எந்த ஊரைச் சார்ந்தவன் என்கின்ற பதிவு இல்லை.

ஆயினும் வெளியாகி இருக்கும் ஒரு பாடல் அதாவது உழைப்பின் சிறப்பைச் சொல்லும் பாடல் அருமையாக இருக்கிறது.

கல்வி என்பது பெருங்கடல் என எழுதி வரும் பேராசிரியர் செ.இரா. செல்வகுமார், வள்ளுவம் என்ற தொடர் கட்டுரையின் ஆசிரியர் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், தமிழன்னை நான்மணிமாலை படைத்து வரும் செம்மொழிக் கவிஞர் மெய்ஞானி பிரபாகர பாபு ஆகியோர் பாராட்டுக்கு உரியவர்களே.

வள்ளலாரை வணங்குவோம் எனப் புலவர் தி.வே. விஜயலட்சுமி தருகிறார்.

நானிலம் புகழும் நாவரசர் ஔவை நடராசன் என்ற தலைப்பில் இலக்குவனார் திருவள்ளுவன் எழுதியிருக்கும் ஒரு கட்டுரை பாராட்டத்தக்க ஒன்றுதான்.

தமிழறிஞர் ஐயா அஔவை நடராசன் அவர்களின் 90-ஆவது பிறந்தநாள் சிறப்புக் கட்டுரையாக இதனைப் படைத்திருக்கிறார்.

அவரின் புகழை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்... அவரது தமிழ்ச் சேவைகளைப் புகழ்ந்திருக்கிறார்... அவரது சிறப்புகளைச் சிலாகித்திருக்கிறார்.

அவரைப் பற்றி நிறைய சொல்லிவிட்டு நிறைவாகத் தமிழறிஞர் ஐயா ஔவை நடராசன் மறைவுக்கு அரசு மரியாதை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது என நிறைவு செய்து இருக்கிறார்.

என்னைப் பொறுத்தமட்டில் இது போதுமானதாக இல்லை என நான் சொல்ல விரும்புகிறேன்.

அதாவது ஐயா அவர்களின் மறைவு செய்து கேட்டவுடன் திருநெல்வேலியில் பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக எனது தலைமையில் நடந்த அஞ்சலி செலுத்தும் கூட்டத்தில் நான் பேசினேன் ..." ஐயா ஔவை நடராசன் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசு ஒரு நினைவுச் சின்னம் அல்லது மணி மண்டபம் ஏற்படுத்த வேண்டும்" என்று நான் பேசினேன்.

எனது பேச்சு அன்றைய நாளிதழ்களில் வெளியானது.

அது நிறைவேறி இருந்தால் இன்றைக்கு நமக்கு நிறைவாக இருந்திருக்கும்.

எனினும் இன்னும் தமிழ்நாடு அரசு ஔவை நடராசனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

இதழின் அடுத்த பகுதியான அறிவோம் என்கின்ற நான்காவது பகுதியில் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநர்களின் பெயர்களையும் அவர்களின் பணிக் காலங்களையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

முனைவர் சண்முகம் அவர்களின் பொருள்களின் இணையப் பயன்பாடுகள் என்ற கட்டுரை சிறப்பு.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே... என்கின்ற பகுதியில் கடந்த வாரத்தைப்போல தமிழன்பன் முத்துசாமியின் கவிதை அருமை.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் ஏப்ரல்- 29 முதல் மே- 5 வரை தமிழ் வார விழாவாக நடத்தப்படும் என்கின்ற அறிவிப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110

-விதியின் கீழ் அறிவித்த அந்த அறிவிப்பின் முழு வடிவத்தைச் செய்தி வெளியீடு என்கின்ற பகுதியில் வெளியிட்டு இருப்பது பொருத்தம்.


பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசு செய்திருக்கும் இந்த இமாலய புகழுக்காகத் தமிழ் அன்பர்களாகிய நாம் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களைப் போற்றுவோம்.

இந்த அறிவிப்பினைப் பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக வரவேற்று அறிக்கை ஏற்கனவே நான் வெளியிட்டு, அது சில நாளிதழ்களில் கூட வெளியாகி இருக்கிறது.

இதழின் நிறைவு பகுதிகளான சட்டவியல் அகரமுதலி, புகழ் வணக்கம் ஆகிய பகுதிகளோடு என்றும் இல்லாத அளவிற்கு 42-பக்கங்களில் நிறைவாகியிருக்கிறது இந்த வார உலகத்தமிழ் மின்னிதழ்.

வாழ்க ஐயா ஔவை நடராஜன் புகழ்...

ஓங்குக பாவேந்தர் பாரதிதாசன் தமிழ்ப் புகழ்.



கவிஞர் பேரா, திருநெல்வேலி.



செய்திகளை முந்தி தருவது
மாலை முரசு
தினந்தோறும் படியுங்கள்

தலைமையில் ஆய்வாளர் ஷியாம்சுந்தர், தனிப்பிரிவு உதவி ஆய்வாளர் தமாதவன், தனிபிரிவு காவலர்கள் செந்தில் ரமேஷ், விக்

டர்பாக தந்தை , மகன் இருவரையும் கைது செய்தனர். மேலும் அவர்களிடம் இருந்து 2, 770 கிலோ ஆம்பர் கிரீஸ் கைப்பற்றப்

மறைந்த மூத்த தமிழறிஞர் அவ்வை நடராசனுக்கு நெல்லையில் பொதிகை தமிழ் சங்கம் சார்பில் கவிஞர் பேரா அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம்.



தமிழறிஞர் அவ்வை நடராசனுக்கு

## தமிழக அரசு சார்பில் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும்!

### பொதிகைத் தமிழ்ச் சங்கம் கோரிக்கை!!

நெல்லை, நவ.23–

பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக மறைந்த மூத்ததமிழறிஞர்அவ்வை நடராசனுக்கு புகழஞ்சலி செலுத்தும்நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதிகைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் பேரா தமிழறிஞர் அவ்வை நடராசன் படத்துக்கு மாலை சூட்டி, அவரது தமிழ்ப் பணிகளைப் பற்றி பேசினார். தொடர்ந்து அவர் பேசுகையில், "தமிழகத்தின் மூத்த தமிழறிஞராக விளங்கிய அவ்வை நடராசனின் மறைவு தமிழ்ச் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும். தமிழின் ஆக்கமாகவும்,தமிழுக்கு ஊக்கமாகவும் விளங்கியவர் அவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தராகவும், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராகவும், அத்துறையின் அரசுச் செயலாளராகவும் அரும்பணியாற்றியவர். தமிழுக்கு அரிய பல படைப்புகளைத் தந்தவர். இந்திய ஆட்சிப் பணியில்லாத ஒருவர் அரசுத் துறையில் செயலாளராகப் பணியாற்றிப் பெருமைப் படைத்தவர் அவ்வை நடராசன்.

தமிழ்நாடு அரசு சார்பில் அவ்வை நடராசனுக்கு நினைவுச் சின்னம் ஒன்றினை அமைத்து அவரின் தமிழ்ப் பணிகளுக்குச் சிறப்புச் சேர்க்க வேண்டும் என்பதே பொதிகைத் தமிழ்ச் சங்கத்தின் விருப்பமாகும்.

இவ்வாறு பொதிகைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் பேரா கூறினார்.

தொடர்ந்து பொதிகைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் திருக்குறள் இரா.முருகன், சீனி, லட்சுமி மற்றும் திருநெல்வேலி தமிழ் வளர்ச்சித்துணை இயக்குநர் அலுவலக அலுவலர்கள்உட்படபலர்அவ்வை நடராசன் படத்திற்கு மரியாதை செலுத்தினர்.




*23.04.2025 உலகத்தமிழ் 281 தமிழ்க்கடல் ஔவை நடராசன் ஐயா அவர்களின் 90ஆம் பிறந்தநாள் நினைவாக அமைந்த இதழ் முகப்பு அருமை. ஐயா அவர்களுக்கு நாம் புகழ் வணக்கம் செலுத்துவோம்.*

*உலகப் புத்தக தினத்தையொட்டி ஆசிரியர் "வாசிப்போம் நேசிப்போம்" கட்டுரை வழங்கியுள்ளார். பொதுவாக மனித வளர்ச்சியில் பெரும்பாலான தகவல்களை மரபணுவே கடத்திவிடுகிறது. ஆனால், மனிதன் தன் வாழ்நாளில் கற்றுத் தெரிந்து கொண்டவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற முயற்சிதான் ஓலைச்சுவடிகள், செப்பேடுகள். அவை இன்று வளர்ச்சி கண்டு புத்தகங்கள், மின் நூல்கள் என நம் கைகளில் தவழ்கிறது என்பது சிறப்பான கருத்து.*

*அவ்வப்போது பகுதி செல்வராஜர் - ஜெயலட்சுமி என்ற தம்பதியருக்கான வாழ்த்து. தேன் துளி 1 தமிழில் என்ன இல்லை? மருத்துவமனையில் உள்ள லேபர் அறைக்கு மகப்பேறு இல்லம் எனலாம். ஆனால் சங்க இலக்கியத்தில் உள்ள பழைய சொல் 'ஈனில்' என்பது பொருத்தமானது என ஔவை நடராசனார் தரும் செய்தி சிறப்பு.*

*உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்கள் தரும் சேரமன்னர் வரலாறு பகுதியில், பதிற்றுப்பத்து நூலைத் துணையாகக் கொண்டு இதுவரை சேரமன்னர்கள் வரலாற்றை ஒருவாறு நிரல்பட வைத்துக் கண்டு வந்தோம் என முடிப்புரை தருகிறார்.*

*திருவள்ளுவர், தொல்காப்பியம் போன்ற பல நூல்களை ஆய்ந்தறிந்தவர், பிற புலவர் பால் வறுமை குடி கொண்டிருந்ததை அறிந்து மிக வருந்தினார் எனக் குறள்கள் வழி அறியலாம் என்கிறார் நாகை சொ.தண்டபாணிப் பிள்ளையவர்கள்.*

*ஆழங்கண்ட ஆளுமையர் பகுதியில் திருவாசகமணி குறித்து ஔவை நடராசனார் தொடர்கிறார். இராஜாஜி முதலமைச்சரான போது, பஜகோவிந்தம் பதவியேற்றது எனத் தலையங்கம் எழுதினார். அத்தலையங்கம் செட்டியாருக்குப் பிடிக்கவில்லை. அரசியலில் ஆச்சாரியாரைப் பழிப்பது நன்றாக இருக்காது எனச் செட்டியார் எண்ணியதை அறிந்த திருவாசகமணி மறுநாளே வேலையை*

விட்டுவிட்டார்.

பேராசிரியர் திரு செ.இரா. செல்வகுமார் அவர்கள் 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கல்வி எல்லாப் பிரிவினருக்கும் சமமாக இல்லை; பள்ளிகள் சர்ச்சுடன் இணைந்திருந்தது; மதக் கோட்பாடுகள் கற்பிக்கப்பட்டன எனத் தெரிவிக்கிறார்.

மக்கள் நலமே அரசின் முழு நோக்கம் என்பது வள்ளுவம். இறைமாட்சி, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை அதிகாரங்கள் இவ்வுண்மை காட்டுவன என்பது மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் கூற்று.

புலவர் திருமதி தி.வே.விஜயலட்சுமி அவர்கள் வள்ளலார் குறித்த 11 அழகிய வெண்பாக்களை எழுதியுள்ளார்.

திரு.இலக்குவனார் திருவள்ளுவன் வழங்கும் 'நானிலம் புகழும் நாவரசர் ஔவை நடராசன்' கட்டுரை அருமை.

முனைவர் திருமதி க.சுபாஷிணி 15 ஏப்ரல் 1912 அன்று இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா சென்ற ஆர்.எம்.எஸ். டைட்டானிக் கப்பல் பனிக்கட்டி மோதி உடைந்து பெரும் விபத்து ஏற்பட்டது. இச்செய்தியைப் பினாங்கு ஞானாசிரியன் இதழ் அதே ஏப்ரல் மாத இதழில் பதிக்கின்றது எனக் குறிப்பிடுகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ் வார விழா ஏற்பாடு செய்தி சிறப்பு.

சட்டவியல் அகரமுதலி, புகழ் வணக்கம் நிறைவாக 41, 42ஆம் பக்கங்களில் இடம் பெற்றுள்ளது.

மகிழ்ச்சி.



முனைவர் தேவி நாச்சியப்பன்

# தமிழ்ப் பல்கலைக்கழகம் துணைவேந்தர்கள்

| வ.எண் | பெயர் | பதவிக் காலம் | |
|---|---|---|---|
| 1. | முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் | 19.09.1981 | 19.06.1984 |
| 2. | முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் | 22.09.1984 | 31.07.1986 |
| 3. | முனைவர் ச. அகத்தியலிங்கம் | 01.12.1986 | 30.11.1989 |
| 4. | முனைவர் சி. பாலசுப்பிரமணியன் | 04.12.1989 | 03.12.1992 |
| 5. | முனைவர் ஔவை நடராசன் | 16.12.1992 | 15.12.1995 |
| 6. | முனைவர் கி. கருணாகரன் | 11.01.1996 | 03.09.1998 |
| 7. | முனைவர் கதிர். மகாதேவன் | 19.02.1999 | 14.09.2001 |
| 8. | முனைவர் இ. சுந்தரமூர்த்தி | 19.12.2001 | 18.12.2004 |
| 9. | முனைவர் சி. சுப்பிரமணியம் | 06.06.2005 | 05.06.2008 |
| 10. | முனைவர் ம. இராசேந்திரன் | 19.06.2008 | 18.06.2011 |
| 11. | முனைவர் ம. திருமலை | 10.02.2012 | 09.02.2015 |
| 12. | முனைவர் க. பாஸ்கரன் | 06.08.2015 | 05.08.2018 |
| 13. | முனைவர் கோ. பாலசுப்ரமணியன் | 04.10.2018 | 03.10.2021 |
| 14. | முனைவர் வி. திருவள்ளுவன் | 13.12.2021 | 20.11.2024 |


45

# பொருள்களின் இணையப் பயன்பாடுகள்



- முனைவர் க.சண்முகம், சென்னை

## விவசாயத்தில் பொருள்களின் இணையப் பயன்பாடுகள்




விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருள்களிலும் உணரிகள் மூலம் எளிதில் தேவையான தீர்வுகளைக் கண்டறிய முடியும்.

### வினைதிறன்மிக்க வேளாண்மை (Powerful forming):

நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, சுத்தமான உணவை மக்களுக்கு நிலையானதாகக் கொண்டு செல்ல உதவும் மிகச்சிறந்த தொழில்நுட்ப முறையாகும்.

பொருள்களின் இணையத் தொழில்நுட்பம் மூலம், வினைத்திறன் மிக்க வேளாண்மையை ஒளி உணரிகள், ஈரப்பதம் உணரிகள், வெப்பநிலை உணரிகள், மண்ணின் ஈரப்பதம் போன்றவற்றின் உதவியுடன் நாம் பயிர் செய்யும் வயல் பகுதியைக் கண்காணிக்கவும் மேற்கொள்ளவும் முடியும்.

எடுத்துக்காட்டாக, தற்போது விவசாயிகள் இரவு நேரத்தில் வயலுக்கு, தண்ணீர் மோட்டாரை இயக்கம் செய்துவிட்டு அந்த வயலுக்குத் தேவையான அளவு தண்ணீர் செல்லும் வரை, உறங்கிக்கொண்டிருப்பார்கள்.

சில நேரத்தில் நன்கு உறங்கிவிட்டால், தேவையான அளவை விட அதிக அளவு தண்ணீர் நிரம்பி விடும், பயிர்களும் வீணாக வாய்ப்பு உண்டு.

இதை நம் பொருள்களின் இணையத் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியும். நீர்ப்பாசன முறையைத் தானியங்கு வைப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்த முடியும். பல்வேறு உணரிகள் மூலம் வயல் பகுதியில் தேவையான அளவு நீர் நிரம்பிய உடன் நீர் மோட்டார் ஆனது தானாகவே இயக்கத்தை நிறுத்திவிடும். அதுபோல விவசாயிகள், நிலத்தின் கள நிலைமைகளை எங்கிருந்தும் கண்காணிக்க முடியும்.

வழக்கமான விவசாயிகளின் அணுகுமுறையுடன் ஒப்பிடும்போது, பொருள்களின் இணைய அடிப்படையிலான வினைதிறன்மிக்க வேளாண்மை மிகவும் பயனுள்ளது. இக்காலகட்டத்திற்குத் தேவையான ஒன்று ஆகும்.

இந்த வினைதிறன்மிக்க வேளாண்மையின் பயன்பாடுகள், பெரிய விவசாய நடவடிக்கைகளைக் குறிவைப்பது மட்டுமல்லாமல், கரிம வேளாண்மை, சிறு, குறு, நடுத்தர வேளாண்மை போன்றவற்றிலும் பல்வேறு மேம்பாடுகளையும் தேவையான உயர்தர வகைகளைப் பாதுகாக்கும் வகையிலும் இதன் மேம்பாடு உள்ளது என்று

சொன்னால் மிகையாகாது.

## துல்லிய வேளாண்மை (Precision farming) :

துல்லியமான வேளாண்மை என்பது, பயிர்கள் மற்றும் கால்நடைகளை வளர்ப்பதில், உணரிகள், தன்னியக்க இயந்திரங்கள், தானியங்கி வன்பொருள், எந்திரவியல் தொழில்நுட்பம் முதலான பல அணுகுமுறைகளைப் பயன்படுத்தித் துல்லியமாக விவசாயம் செய்யும் முறையாகும்.

எடுத்துக்காட்டாக நம் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டிகள் போன்றோர் மேகத்தில் நிகழும் மாற்றங்களை வைத்துத் துல்லியமாக வானிலையைக் குறித்து இன்று மாலை மழை வரும் என்பார்கள். இனிமேல் மழை வராது என்று சொல்வார்கள். உச்சி வெயிலை வைத்து மணி மதியம் 12 எனத் துல்லியமாகச் சொல்வார்கள். இதுபோன்ற அனுபவ அறிவு, அறிவியல் அறிவைத்தான் நாம் அதிவேக இணையம், திறன்பேசி சாதனங்கள், செயற்கைகோள் இடங்களை வைத்து, விவசாய போக்கை எளிதாக, துல்லியமாக நாம் அறிய முடியும்.

இந்தத் துல்லிய வேளாண்மை முறையில் பொருள்களின் இணையத்தின் மிக முக்கியமான பயன்பாடுகள் தான் பயிர் அளவீட்டு முறை (Crop metrics) என்பதாகும்.

இது துல்லியமாக அதி நவீன வேளாண்மை முறைகளின் தேவையான தீர்வுகளை அளிக்கின்றது. பயிர் அளவீட்டு முறையானது பொருள்களின் இணைய நுட்பத்தில் உள்ள உணரிகள் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை ஆய்வு செய்து, என்ன வகையான பயிர்களைப் பயிரிடலாம் மற்றும் நீர்ப்பாசன முறையில் தேவையான மாற்றங்கள், மண்ணின் மாறுபாடு கொண்ட நீர்ப்பாசன பயிர் வயல்களில் இலாபத்தை அதிகரிப்பது விளைச்சலை மேம்படுத்துவது எனப் பல துல்லியமான முக்கிய முடிவுகளை எடுக்கும் வகையில் இந்தப் பயிர் அளவீட்டு முறை (Crop metrics) துல்லியமான விவசாயத்தில் பயன்படுகிறது.

வளர்ந்து வளரும் தொழில்நுட்பத்தில் விவசாய ட்ரோன்கள் (Agricultural drones) மிகவும் பயனுள்ளதாக நம் நாட்டின் முதுகெலும்பாக விவசாயத்தில் பயன்படுகிறது.

**என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்**
**ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்**

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, நம் விவசாய வளங்களையும் நடைமுறைகளையும் மேம்படுத்த விவசாய ட்ரோன்கள் பயன்படுகின்றன.

பயிர் வள மதிப்பீடு, நீர்ப்பாசனம் (Irrigation) பயிர் கண்காணிப்பு (Crop monitoring), பயிர் தெளித்தல் (Crop spraying), நடவு செய்தல் (Planting), மண் மற்றும் கள பகுப்பாய்வு ஆகிய பயன்பாடுகளுக்கும் நிலத்தடி சார்ந்த ட்ரோன்கள் மற்றும் வான்வழி சார்ந்த ட்ரோன்கள், விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ட்ரோன்களானது, பயிர்களின் வளத்தைப் படிவமாக எடுத்து அனுப்பும் இதன்மூலம் பயிர்களின் வளத்தை இருந்த இடத்தில் இருந்தே கண்காணிக்க இயலும். மேலும் எளிதாக பயிர்களின் தன்மையை ஆராய்ந்து (ட்ரோன்களின் மூலம் பெறப்படும் பயிர்களின் தரவுகளை வைத்து) சிறந்த திட்டமிடலுக்கு இந்த ட்ரோன்கள் விவசாயத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் பொருள்களின் இணையத்தின் பங்கு அளப்பரியது.




எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே!

# செம்மொழியாம் செந்தமிழின் சீர்மை!!

86



நிலவொன்று, கதிரொன்று, பரந்திருக்கும்
நீலவண்ண வான்ஒன்று, ஞாலம் ஒன்றே!
பலநூறு மொழிகளெல்லாம் இருந்த போழ்தும்
பன்னரிய பெருவளத்தால் இனிய மாண்பால்
உலகெங்கும் ஒளிர்கின்ற மொழியும் ஒன்றே!
ஒண்டமிழே அதுவென்றால் மறுப்பார் உண்டோ?
விலகாத இருள்நீங்க, அடிமை எண்ணம்
வீழ்ந்திடவே விழிப்புணர்வைத் தமிழால் பெற்றோம்!



முனைவர் கடவூர் மணிமாறன்

அருந்தமிழே மூலமொழி! உலகில் அந்நாள்
அடிபதித்த முதல்மாந்தன் தமிழன்; அன்னோன்
பிறந்தகமோ தெற்கிருந்த குமரிக் கண்டம்;
பிழைத்திடவே உட்புகுந்த ஆரியத்தின்
கரவுகளை அறியாமல் தமிழர் அந்நாள்
களங்கத்தை மடிசுமந்து மானம் போக்கி
வரலாற்றுப் பழிசுமக்க லானார்! வீணே
வல்லிருளில் தளைப்பட்டார்! மீண்டார் இந்நாள்!

ஆங்கிலம்போல் இலத்தீன்போல் கிரேக்கம்போல
அயற்சொற்கள் கலப்படத்தால் அழிவெய் தாமல்
ஓங்குதனித் தன்மையெலாம் ஒருங்கே பெற்ற
உயர்தனிச்செம் மொழியாக மிளிருகின்ற
பாங்குமிகு பைந்தமிழோ கல்வெட் டாலும்
பழம்பெருமை மெய்க்கீர்த்தி, செப்பேட் டாலும்
நீங்காமல் நெஞ்சுள்ளே நிமிர்ந்து நிற்கும்
நீள்புவியில் அரசோச்சி நிலைத்து நிற்கும்!

...வளரும்

# சட்டவியல் அகரமுதலி! 85

**English - Tamil Legal Glossary**
**Dr.Marco A.Fiola**
**Department of Languages , Literatures and Cultures,**
**Ryerson Law Research Centre, Ryerson University**

*821) அற்றோணித் தத்துவப்பத்திரம்; அதிகாரப்பத்திரம் - power of attorney*

*Document that authorizes a person to make, on the grantor's behalf, decisions concerning the grantor's property and personal care issues. Restrictions on the Attorney's powers, if any, should be contained in the written document itself.*



*822) அறவிடல் - estreatment*

*The enforcement of a forfeited recognizance due to failure to comply with the conditions agreed to.*

*823) அனுமதி - leave*

*Permission of the court.*

*824) அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேல் தங்குதல் - overstay*

*To stay beyond the set limits or expected duration*

*825) அனுமதிக்கப்படமுடியாத - inadmissible*

*That which, according to established legal principles, cannot be received into evidence at a trial for consideration by the jury or judge in reaching a determination of the action.*

*826) அனுமானிக்கப்பட்ட நிலை - implied status*

*A foreign worker is considered to be on "Implied Status" when he/she has applied for renewal of his/her study permit or work permit prior to the expiry of the permit. A receipt issued by the courier is required as a proof that the application for a permit renewal has been received by Citizenship and Immigration Canada (CIC) prior to the expiry date of the work/study permit.*

*827) ஆக்கச் சார்பான அறக்கட்டளை - constructive trust*

*A type of trust that may arise where one person contributes to the worth of another person's property. The court may find that it is a constructive trust if the property owner is unjustly enriched and the contributor receives no benefit. The effect of a constructive trust is that the owner of the property may have to hold the property in trust for the contributor.*

*828) ஆட் கொணர்வு மனு - habeas corpus*

*A remedy available to any person detained or imprisoned, not to hear and determine the case upon the evidence, but to immediately and in a summary way test the validity of the person's detention or imprisonment.*

*829) ஆட்கடத்தல் - human trafficking*

*The transportation or commercial exchange of an individual by coercion or deception for the purpose of exploitation.*

*830) ஆணை; ஒன்றைச் செயல்படுத்தக் கொடுக்கும் அதிகாரப் பத்திரம் - warrant*

*A judicial order directing a peace officer to do something such as arrest someone, search or seize something, or enforce a judicial order.*

*****



# புகழ் வணக்கம்

123

| | |
|---|---|
| 763 | திருவையாறு அவ்வை கோட்டம் தொடக்க விழாவிற்கு அய்யா அவ்வை அவர்கள் தான் சிறப்பு விருந்தினர். அய்யா அவர்களுடன் நானும் காரில் சென்னையில் இருந்து நானும் உடன் சென்றேன். செல்லும் வழியில் சிதம்பரம் சென்று அங்கே நண்பர் ஒருவரின் இல்லத்தில் மதிய உணவு முடித்து மீண்டும் பயணித்தோம். இடையில் வாகனம் பழுது பின்னர் வேறு ஒரு கார் வரச் சொல்லி திருவையாறு சென்றடைந்தோம். மறுநாள் மாநாடு சிறப்பாக முடித்து அய்யா அவர்கள் சென்னைக்கும் நான் மதுரைக்கும் திரும்பினோம். எத்தனை ஆண்டுகள் கடந்த போதும் இன்னும் பசுமையாக இருக்கிறது நினைவுகள்.....<br>Manivannan Mani |
| 764 | என்றும் அவர்கள் புகழ் நிலைத்திருக்கும்<br>Fathima Mainthan |
| 765 | ராஜ கம்பீரம்... நினைவுகளுடன்<br>Asokan Pocket Novel |
| 766 | 1984இல் தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத் துறை முதல் செயலராய் வந்ததும் முதலில் அகரமுதலியை ஆய்வு செய்து எனக்கு முதல் குறிப்பானை கொடுத்து – நான் அப்பத்தான் தலைமைசெயலகம் பார்த்து அய்யாவைப் பார்த்து அதிர்ந்தேன்... எனக்கு அப்ப வயிற்றுவலிக்கு மருந்தான பாடலை எழுதிகொடுத்து நாள்தோறும் பாடச் சொன்னது என் உயிர் உள்ளவரை இமைப்பொழுதும் மறக்கத்தான் முடியுமா?<br>SK Ganesan |
| 767 | அய்யா அவர்களுடைய புகழ் வாழ்க!<br>Navaladi Karthikeyan Balakrishnan |
| 768 | செய்தி அறிந்தேன் ஐயா... ஆழ்ந்த இரங்கல்... தலைசிறந்த தமிழறிஞரைத் தமிழகம் இழந்து வாடுகிறது..! தங்களுக்கு எப்படி ஆறுதல் சொல்லுவேன்.... அமைதி கொள்க<br>பாரதிபாலன் |
| 769 | செய்தி அறிந்து மிகுந்த துயருற்றேன். தங்கள் தாய் தந்தை இருவரும் குப்பம் வந்த நினைவுகளை எனது துணைவியாரும் நினைவு கூர்ந்தார். எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.<br>Dr Balasubramaniam |